***உங்கள் சிந்தனைக்கு............***

"ஆத்மா என்றென்றைக்கும் அழியாதது, உடல் அழிந்துபோகக்கூடியது"
இது அனைவரும் அறிந்த ஒரு கருத்து.
இந்த உலகத்தின் வாழ்வு..... நமக்கு ஒரு நாள் முடிவுக்கு வரும். (உடல் அழியும்.)
இந்த உலகத்தின் வாழ்வுக்குப் பிறகும் நமது ஆத்மா என்றென்றைக்கும் வாழும்.

நாம் ஆண்டவரை அறிந்து ஆண்டவரோடு வாழும்போது, ஆண்டவர் நமது ஆத்மாவைக் காத்து அவரோடு என்றென்றைக்கும் வாழ ஆசீர்வதிப்பார்.
அதை நம் திருவள்ளுவர் அருமையாக சொல்லியிருக்கிறார்:
அருளில்லார்க்கு **<u>அவ்வுலகம்</u>** இல்லை பொருள் இல்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு. (குறள் 247)

இந்த அருளைப்பெற்று, நமது ஆத்மா ஆண்டவரோடு வாழ,
ஆண்டவர் என்ன நமக்கு சொல்லியிருக்கிறார் என்பதை அறிந்து அந்த அறிவிலே வளர என்ன ஆயத்தம் செய்கிறோம்?

Let us divide our life as 3 parts:....

***<u>Ref: Dictionary</u>***

<u>1. Personal Life:</u>

something done or granted out of goodwill, rather than from justice or for remuneration;

<u>2. Work Life:</u>

employment, as in some form of industry, especially as a means of earning one's livelihood:

<u>3. Spiritual Life:</u>

**<u>Spiritual:</u>** relating to the soul, ஆன்மீக, மனத் தத்துவ:
pure, பரிசுத்தமான: holy, புனிதமான, தெய்வரீதியான

**<u>Soul:</u>** the spiritual part of humans regarded in its moral aspect, or as believed to survive death and be subject to happiness or misery in a life to come: arguing the immortality of the soul.

Personal Lifeக்காகவும் work lifeக்காகவும்
நாம் எவ்வளவோ ஆயத்தங்களை நேரம் கொடுத்து பிரயாசப்படுகிறோம்.

Spiritual Lifeக்கான அர்த்தத்தை கவனித்துப் பாருங்கள்.
வரப்போகிற **<u>அவ்வுலக வாழ்க்கைக்கு</u>** என்ன ஆயத்தம் செய்கிறோம்.?

Personal Life and Work Lifeல் நமக்குள்ள வித்தியாசங்கள் ஏராளம்.
ஒருவருக்கொருவர் கருத்துக்களில் வித்தியாசங்களை நாம் காணலாம்.
இதேபோன்ற ஒரு அடிப்படையை Spiritual Lifeல் நாம் கடைபிடிக்ககூடாது.
Spiritual புனிதமானதும் நமது ஆன்மாவுக்கு தொடர்புள்ளதுமானது. தெய்வம் ஒன்றுதான்,
புனிதமானதும் பரிசுத்தமானதுமானதுமான தெய்வத்தை அறிந்துகொள்ள,
<u>மனிதர்களின் மாமசத்திலே உள்ள பெலவீனங்களை நாம் தவிர்த்து,</u>
மனிதர்களுடைய ஆன்மீக எண்ணங்களின் தெய்வீகத்தை சரியாக அறிந்துகொள்ள,
<u>தெய்வத்தின் வார்த்தைகளை வாசித்து தியானித்துப் பாருங்கள்.</u>
தெய்வத்தின் பிரதான நோக்கம் நமக்கு விளங்கும்.

<u>1 தெசலோனிக்கேயர் 4:16-17</u>

ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.
பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் **<u>எப்பொழுதும் கர்த்தருடனேகூட</u>** இருப்போம்.

<u>பிலிப்பியர் 1:9-11</u>

மேலும், உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக்கொள்ளத்தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும்,
தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசுகிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி,
நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்பரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டுதல்செய்கிறேன்.